கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். முதல் மூன்று பரிசுகளுடன் ஊக்க பரிசுகளும் வழங்கப்படும்.

## பாராட்டுக்கள்

சுத்தம் மற்றும் முழு சுகாதார தமிழகம், தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் சார்பாக நடைபெற்ற மாவட்ட அளவிலான SLOGAN போட்டியில் பங்கெடுத்து, 2-ஆம் பரிசையும் ரூ.1000/- பணமுடிப்பையும் பெற்றிருக்கும் **காவல்கிணறு, புனித பவுல் நடுநிலைப்பள்ளியைச்** சார்ந்த த.மஞ்சு என்ற 8-ஆம் வகுப்பு மாணவிக்கும், பள்ளித் தாளாளர், தலைமை ஆசிரியை, பயிற்றுவித்த ஆசிரியர் அனைவருக்கும் நமது மனமார்ந்த பாராட்டுக்கள்.

## அர்ப்பணமும் அடிபணிதலும்

இயேசு என்னும் இறைமனிதரே பணிவிற்கு முழுச் சான்றாகிறார். அவர் தமது வாழ்வால் நமக்கு பணிவை கற்றுத் தருகிறார். சிறுவனாய் தம் தாய் தந்தையருக்குப் பணிந்து நடந்தவர் (லூக். 2:48) இறுதி வரை தம் தந்தையின் திருவுளத்திற்குப் பணிந்து நடந்தார். அந்த இயேசுவைப் பின் தொடர்வதே நமது வாழ்வாக வேண்டும்.

பணிவென்பது, அடிப்படையில் மனம் சார்ந்தது. கற்பு, ஏழ்மை இவற்றை தம் உடல், உபயோகிக்கும் பொருள் என புறவெளிப்பாடுகளில் காட்டிவிட முடியும். ஆனால், பணிவு அகத்தை மட்டுமே சார்ந்தது. 'இறைவனின் திருவுளம்' இது என உள்மனதிற்குள் முழுமையாய் ஏற்று நமக்கு கொடுக்கப்படுகின்ற பணிகளை விருப்பமுடன் செய்ய வேண்டும்.

நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்த அன்னை மரியாள், தனக்கு ஏற்படுகின்ற அவமானம், அவப்பெயர், புறம் தள்ளப்படுவோமோ என்ற தயக்கம்,, கல்லால் அடிபடுவோமோ என்ற அச்சம் போன்றவற்றால் கலக்கமுற்றாலும் 'இது ஆண்டவரின் திருவுளம்' என உணர்ந்ததால் துணிந்து, "இதோ ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு ஆகட்டும்" என அடிபணிந்தார். அன்னை மரியாவின் கீழ்படிதலால் உலகில் வாழ்வின் ஊற்று பிறந்தது. எனவே, மாணவ- மாணவியர்களுக்கு முன்மாதிரியாக வாழ்கின்ற ஆசிரியர்களாகிய நாமும் கீழ்படிதல் என்ற பண்பினை கொண்டிருப்பதன் மூலம் இறைவனின் பிள்ளைகளுக்குரிய முதிர்ச்சியை பெற்றுக்கொள்வோம்.

ஏன்? எப்படி? எதற்காக? என்று சாக்ரடீஸ் கேட்கச் சொன்ன கேள்விகளை எல்லாம் தவறுதலாகப் புரிந்து கொண்டு, கேட்கக் கூடாத இடங்களிலும், கேட்க அவசியம் இல்லாத இடங்களிலும் கேட்டுக் கீழ்படிதலை இளக்காரமாகவும், இயலாத்தனமாகவும் பார்க்கின்றனர், பணிய மறுக்கின்றனர். நடப்பதற்கெல்லாம் அடுத்தவரையும் சூழலையும் குறைகூறி, ஏற்றுக்கொண்டால் தன்னை இழிவாகக் கருதிவிடுவார்களோ என்று தேவையற்ற உயர்வு மனப்பான்மை கொண்டு எல்லாவற்றிற்கும் எதிர்கேள்வி கேட்டு மடக்குதலையும், எதிர்ப்பையுமே பலர் இலட்சியமாக்கிவிட்டனர்.

பணிவு என்பது மன அமைதி அளிக்கும். ஆனால், எதிர்ப்பு இதய அமைதியைக் குலைக்கும். அநீதிகளை, அநியாயங்களை எதிர்ப்பது அத்தாவசியம். அதற்காக, அனுதினம் நிகழும் அத்தனையையும் எதிர்ப்பதும், தனக்கு விருப்பமில்லாதவர்கள் பொறுப்பில் இருந்தாலும் அவர்களின் கட்டளைகளைப் புறக்கணிப்பதும் தவறான செயலாகும். இதனை ஆசிரியர்கள் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

ஏனெனில், அடிபணிதலே அர்ப்பணத்தின் அடிநாதம். அது அழகான இசையாய் ஒலிக்கட்டும். எல்லோரும் இன்புறுவர். இகமெல்லாம் பயன்பெறும்.